Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume - 1, Special Issue - 1, January 2022 E-ISSN: 2583-0481

# Speciality of the Towns mentioned in Aatrupadai Literature

**M. Padmaja**, Research scholar of Tamil, S.T.Hindu College, Nagercoil, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-0267-7336**
**Dr R.Sorna Bamila,** Assistant Professor, Department of Tamil, S.T.Hindu College, Nagercoil, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-3677-4644**
**DOI: 10.5281/zenodo.6621513**

## Abstract

*Sangam literature is the mirror to capture the life of the ancient Tamils. That is the important age in Tamil literature. Many of them are in the form of songs. They are of various varieties. Among these, this article is based on the life of Panan, Porunan, Virali and Patini who dedicated to the Aatrupadai literature about the specialities of towns, cultures and resources of the towns where they lived.*

**Keywords:** Aatrupadai, Towns, Speciality, Culture, Resources.

## References

[1] R. Aallavanthaar. *Village Names in Literature*. World Tamil Research Institute, Chennai-600 443, First edition, April 1984.
[2] R. Seyapal- *Akananuru*, New Century Book House (P) Ltd, 41, b. SIDCO, Industrial Estate, Chennai-600098.
[3] R. Mohan- *Thirumurukaaruppadi*, New Century Book House (P) Ltd, 41 P.Cidco, Industrial Estate, Chennai- 600098.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

செங்காந்தள்

அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்



மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# ஆற்றுப்படை கூறும் ஊர்களில் சிறப்புகள்

**மா.பத்மஜா,** முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்க்கலை ஆய்வகம்,

தெ.தி.இந்துக்கல்லூரி, நாகர்கோவில், தமிழ்நாடு, இந்தியா.

ORCiD: https://orcid.org/0000-0002-0267-7336

**முனைவர் இரா. சொர்ணபமிலா**, உதவிப்பேராசிரியர், தமிழ்க்கலை ஆய்வகம்,

தெ.தி.இந்துக்கல்லூரி, நாகர்கோவில், தமிழ்நாடு, இந்தியா.

ORCiD: https://orcid.org/0000-0002-3677-4644

**DOI: 10.5281/zenodo.6621513**

**ஆய்வுச்சுருக்கம்**

*பண்டையத் தமிழரின் வாழ்வியலை படம்பிடித்துக் காட்டும் கருவியாக விளங்குபவை சங்க இலக்கியங்கள். அவ்விலக்கியங்கள் பாட்டும் தொகையும் ஆகும். இவற்றில் ஆற்றும்படை இலக்கியங்களில் வாழ்ந்த பாணன், பொருணன் விறவி, பாடினி போன்றோரின் வாழ்வையும் அவர்கள் வாழ்ந்த ஊர்களின் சிறப்புகளையும், பண்பாடுகளையும் அவற்றின் வளங்களையும் எடுத்துக் கூறுவதாக இக்கட்டுரை அமைத்துள்ளது.*

**திறவுச்சொற்கள்:** ஆற்றுப்படை, ஊர்கள், சிறப்புகள், பண்பாடு, வளங்கள்.

## முன்னுரை

சங்க இலக்கியங்கள் பண்டைய கால தமிழர்களின் வாழ்க்கை பிரதிபலிப்பாய் திகழ்கின்றது. சங்க இலக்கியம் என்பது பாட்டும் தொகையும் ஆகும். பத்துப்பாட்டு நூல்களுள் ஆற்றுப்படை இலக்கியங்கள் பாணன், பொருணன், விறலி, பாடினி போன்ற பலரின் வாழ்வையும் அவர்கள் வாழ்ந்த ஊர்களின் சிறப்புகளை அழகாக எடுத்துரைக்கின்றன. இத்தகைய ஆற்றுப்படை நூல்களில் இடம்பெறும் ஊர்களின் சிறப்புகளையும், பண்பாடுகளையும் இவ்வாய்வுக் கட்டுரையின் வழி அறியலாம்.

## திருப்பரங்குன்றம்

முருகனின் ஆறுபடை வீடுகளில் முதலாவது கூறப்படும் ஊர் திருப்பரங்குன்றம். இவ்வூர் தற்கால மதுரைக்கு மேற்கே அமைந்துள்ளது. பெரிய கடை வீதிகளையும், மாட மாளிகையும் மதிற்சுவர்களை கொண்ட கோட்டையில் பறக்கும் கொடியையும் விரிபந்தும்,பாவையும் தொங்குகின்ற மதில் வாயிலை கொண்டுள்ளது.அதன் அடிவாரத்தில் வயல்களையும்,மலைமேலிருக்கும் சுனைகளும் திருப்பரங்குன்றத்தின் பெருமையை உணர்த்துவதாக அமைந்துள்ளது.

இதனை,

**“திருவீற் றிருந்த தீதுநீர் நியமத்து**
**மாடம்மலி மறுகின் கூடற் குடவாயின்**
**இருஞ்சேற்று அகல்வயல் விரித்துவாய் அவிழ்ந்த” (திருமுரு பா.வ:70-72)**

என்ற பாடல்வழி சிறப்பாக எடுத்துரைத்துள்ளது. கரிய சேற்றினை உடைய வயல்களில் தாமரை மலர்கள் மலர்ந்திருக்கின்றன. அம்மலர்களில் தேனை அதிகமாக உண்டு வண்டுகள் மயங்கி துயில்கின்றன. மாலை வந்ததும் மலர்கள் தன் இதழ்களை மூடிகொள்கின்றன. இரவுமுழுவதும் தாமரை

மலரில் வண்டுகள் தங்கி கதிரவன் வந்ததும் தாமரை மலரின் இதழ்கள் விரிய அங்கிருந்து சென்று நெய்தல் பூவின் தேனை பருக செல்கின்றன. இவ்வாறு வண்டுகளும் நாட்டின் வளத்தை சிறப்பாக எடுத்து உணாத்துகின்றன. இதைப் போன்று மதுரைக்காஞ்சியிலும் குன்றத்தின் சிறப்பையும் விழா நடைபெறும் முறையையும் இனிய ஓசையையும், சிறப்பையும்,

**"துளிமழை பொழியும் தன் பரங்குன்றில்**

**கலிகொள் சும்மை ஒலிகொள் ஆயம்" (திருமுரு பா.வ: 263-264)**

என்கிறது. இவ்வாறு வளம் கொண்ட ஊராக தருப்பரங்குன்றம் அமைகிறது.

**திருச்செந்தூர் - திருச்சீரலைவாய்**

திருச்செந்தூரில் அலைமோதுகின்ற கடற்கரையில் அமைந்துள்ளதால் அலைவாய் என்றும் பெயர் பெற்றது. இதனை நாமனூரலைவாய் என்றும் இப்பதியை நச்சினார்க்கினியர் குறிப்பார். இங்கு முருகன் பன்னிருகைகளையும், ஆறுமுகங்களையும் கொண்டு சிறப்புடன் காட்சித் தருகின்றார். திருச்சீரலைவாய் என்பதை திருச்செந்தூர் என்று கூறுவர். மயில்அகவும் ஓசையும், இடியை போன்று முழங்கும் முரசு ஒலியும், சங்குகள் முழங்கவும் சான்றோர்களால் புகழப்பட்டது இத்தலம். இதனை,

**"உலகம் புகழ்ந்த ஓஙகுஉயர் விழுச்சீர்**

**அலைவாயச் சேறலும் நிலைஇய பண்பே அதா அன்று (திருமுரு பா.வ : 124-125)**

என்ற பாடல்வரி மூலம் அறியலாம்.

**திருஆவினன்குடி**

முருகனின் படைவீடுகளில் திரு ஆவினன் குடியும் ஒன்று தற்போது இவ்வூர் பழனி என்று அழைக்கப்படுகிறது. சங்க காலத்தில் பொதினி என்று பெயர் பெற்றிருந்தது. இது 'ஆவி' என்னும் வேளிர் தலைவனுக்கு உரியதாய் இவ்வூர் விளஙகியது. இதனை அகநானூறு பாடல் வழி அறியமுடிகிறது.

**"முழவு உளழ் திணிதோள் நெடுவேள் ஆவி**

**பொன்னுடை நெடுநகர்ப் பொதினி அன்னநின்" (அகம். 61 பா.வ : 15-16)**

எனும் பாடல் வேளிர்குலத்தைச் சேர்ந்த ஆவி என்ற குறுநில மன்னன் பொதினி என்னும் நகரத்தில் ஆட்சி புரிந்தான் என்பதும் அறியப்படுகின்றது. நெடுங்காலமாக ஆளப்பெற்ற தன் காரணமாக ஆவினன்குடி என்று பெயர் பெற்றது. இதனை, **"ஆவினன்குடி அசைதலும் உரியன்" (திருமுரு பா.வ : 176)** என்ற பாடல் வரிமூலம் அறியலாம்.

**திரு ஏரகம்**

திருஏரகத்தை நச்சினார்க்கினயர் தம் உரையில் மலை நாட்டகத்து ஒரு திருப்பதி என்று பொதுவாக கூறுகிறார். அருணகிரியாரோ சோழ நாட்டிலுள்ள சுவாமிமலை என்னும் தலமே 'ஏரகம்' என்றும் கூறுகிறார். இது அந்தணர்கள் வாழும் சிறப்புபெற்ற தலமாக திகழ்கிறது. திருஏரகம் கும்பகோணத்தின் மேற்கேயுள்ள சுவாமிமலை என்றும் கூறுவர். திருவேரகம் என்னும் இத்தலம் இன்னும் ஆய்வுக்குரியதாகவே உள்ளது. திருவேரகம் என்பது நாஞ்சில்நாட்டு குமாரகோவில் எனக் குறிப்பிடப்படுகிறது. இங்கு அந்தணர்கள் ஈரத்துணியுடன் சென்று வழிப்படும் பழக்கமும் இருந்தது என்பதை நக்கீரரின் பாடல் வரியான **"புலராக் காழகம் புலர உட்கு" (திருமுரு. பா.வ : 184)** தெளிவுப்படுத்துகிறது.

**பழமுதிச்சோலை**

முருகனின் ஆறுபடை வீடுகளில் ஒன்று பழமுதிர்ச்சோலை. இது மதுரைக்கு அருகில் உள்ள திருமாலிஞ்சோலை மலை என்றும் கூறுவர். அருவிகள் ஓசையுடன் முழங்கும் சிறப்பு பெற்றது. அருவிகள் பொன்னையும், மணியையும் அடித்து வரும் வளம்பெற்ற சோலையையுடையது. இதனை,

**"இழுமென இழிதரும் அருவி**
**பழம்முதிர் சோலை மலைகிழவோனே" (திருமுரு. பா. 316-317)**

என்ற திருமுருகாற்றுப்படை பாடல் வரிகள் மூலம் அறியலாம்.

**வெண்ணி**

பொருநராற்றுப்படையில் கரிகால் வளவன் வெண்ணி என்னும் ஊரில் இரும்பெரும் வேந்தர்களை வெற்றி பெற்ற சிறப்பு கூறப்பட்டுள்ளது. கரிகாலன் தாய்வயிற்றில் இருக்கும் போதே அரசவுரிமை பெற்றவன். கடலின் சீற்றம் போன்றும் காண்பவர் அஞ்சும் படியான தோற்றம் கொண்டவன். கரிகாலன் இருபெரும் வேந்தர்களை வென்ற வெண்ணி என்னும் ஊர் சோழ நாட்டு ஊர்களில் ஒன்றாக அமைந்துள்ளது. இதனை,

**"இருபெரு வேந்தரும் ஒருகளத்து அவிய**
**வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்தாள்**
**கண்ஆர் கண்ணி கரிகால் வளவன்" (பொருநரா.பா.வ:146-148)**

என்றும் பாடல் வரிகளால் மூலம் அறியலாம். வெண்ணி என்னும் ஊர் தற்போது தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளது. இன்றும் இது வெண்ணி என்னும் பெயரிலியே அமைந்துள்ளது என்பதை 'இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள்' என்ற நூலான மூலம் அறியலம்.

**உறந்தை**

சிறுபாணாற்றுப்படையில் கூறப்படும் சிறப்புமிக்க ஊர் உறந்தை. இது உறையூர் என்றும் அழைக்கப்படுகிறது. சங்க காலத்தில் சோழ மன்னர்களின் பெரு மதிப்பைப் பெற்று தலைநகரமாக இகழ்ந்த சிறப்பு மிக்க ஊர். காவிரி ஆற்றங்கரையில் அமைந்த குளிர்ந்த வயல்களையும், நீர் வளங்களையும் கொண்டது உறந்தை என்னும் உறையூர் இதனை கோழியூர் என்றும் கூறுவர்.

**"ஆரங் கண்ணி அடுபோர்ச் சோழர்**
**அறம்கெழு நல்அவை உறந்தைஅன்ன" (அகம்.93 பா.வ : 5-6)**

என்னும் பாடல் வரிகள் பகைவரை கொல்லுகின்ற மறம் கொண்ட சோழரது அறம் கொண்ட நல்ல அவையினையுடையது உறந்தை என்பதை வலியுறுத்துகிறது. இதைப்போன்று பட்டினப் பாலையிலும் சோழரது நாடான உறைரியூன் சிறப்பு கூறப்பட்டுள்ளது.

**எயிற்பட்டினம்**

எயிற்பட்டினம் என்பது ஒய்மா நாட்டின் துறைமுகங்களில் ஒன்றாக திகழ்கிறது. இங்கு தாழம்பூ வானது அன்னப்பறவை வெண்மையை போல் பூக்கும். செருத்திப் பூக்கள் பொன்போலப் பூக்கும். புன்னைப் பூக்கள் முத்துகள் போல் கொட்டினவாம். மேலும் நெய்தல் நில உப்பகழிகளையும் மதிலால் சூழப்பட்ட குளிர்ந்த பொய்கையை கொண்டு எயிற்பட்டினம் விளங்குகிறது. இதனை,

**"கானல் வெண்மனல் கடல்உலாய் நிமிர்கர**
**பாடல்சான்ற நெய்தல் நெடுவழி**
**மணிநீர் வைப்பு மதிலொடு பெயரிய**

**பணிநீர் படுவின் பட்டினம் படரின்" (சிறுபாண். பா.வ : 150-153)**

என்ற சிறுபாணாற்றுப்படை பாடல் வரிகள் மூலம் எயிற்பட்டினத்தின் சிறப்புகளை அறியமுடிகிறது.

**ஆமூர்**

நல்லியக்கோடனின் தலைநகரங்களில் ஒன்று ஆமூர். மருத ஒழுக்கம் கொண்ட குளிர்ந்த வயல்களையும் ஞானிகளையும் கொண்டதும், பெரிய அகழியையும், வீடுகளையும் கொண்ட வளம்மிக்க ஊர். நீர் வளமும், நில வளமும், நெல் வளமும்; நிரம்பப் பெற்றது. காஞ்சி மரங்கள் பூமாலை போன்று பூங்கொத்துகளை தொங்கவிட்டது போன்று நிற்கும். அகநானூற்றில் கொடுமுடி என்னும் மன்னனால் பாதுகாக்கப்பெறுவதும் நெடுந்தொலைவிலும் உடைய சிறப்பினைப்பெற்றது ஆமூர் என்பதை,

**"கொடுமுடி காக்கும் குரு உக்கண் நெடுமயில்**
**சேண் விளங்கு சிறப்பின் ஆமூர் எய்தினும்**
**ஆண்டு அமைந்து உறையுநர் அல்லர்" (அகம்.159 பா.வ : 18-20)**

எனும் பாடல் வரி உறுதிப்படுத்துகிறது.

**வேலூர்**

சிறுபாணாற்றுப்படையில் குறிப்பிடப் பெறும் வேலூரானது வேலின் நுனி போன்று ஆம்பல் மற்றும் தாமரை மலர்கள் பூத்திருந்தது போன்ற அமைப்பை உடையால் வேலூர் என பெயர் கொண்டது என்றும், பகையை வென்ற காரணத்தாலும் வேலூர் என பெயர்பெற்றது என்றும் கூறுவர். இதனை,

**"திறல்வேல் நுதியின் பூத்தகேணி**
**விறல்வேல் வென்றி வேலூர் எய்தின்" (சிறுபாண். பா.வ : 172-173)**

என்ற சிறுபாணாற்றுப்படை பாடல் வரிகள் மூலம் அறியலாம். வேலூர் முல்லை நிலம் சார்ந்த பகுதியாகும். இங்கு அவரை கொடியில் பவளம் கோத்தாற் போன்று பூ பூத்திருக்கும். மயிலின் கழுத்து போன்று காயாவின் அரும்பு மலர்ந்திருக்கும். இத்தகைய வளம் பொருந்திய ஊர் வேலூர்.

**தொகுப்புரை**

சங்க இலக்கியங்களில் இடம்பெற்ற ஊர்கள் செழிப்பாகவும், சோலைகள் நிறைந்ததாகவும் வளம் பொருந்திய காடுகளையும் நீர்நிலைகளும் பெற்றிருந்தது. மக்கள் எத்துன்பமும், இன்றி சிறப்புற வாழ்வதற்குரிய அனைத்தும் அவ்வூர்களில் இருந்ததை அறிய முடிகிறது. ஊரையும் ஊரின் பெயரையும் உற்று நோக்குகையில் அதற்குரிய சிறப்பு காரணத்தையும் அரசனின் போர் தன்மையும், தொலைநோக்கு பார்வையும் அறிந்து கொள்ளமுடிகிறது.

**துணை நின்ற நூற்கள்**

[1] ஆளவந்தார்.ஆர். *இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள்.* உலக தமிழாரச்சி நிறுவனம், சென்னை, 1984.
[2] செயபால். இரா. *அகநானூறு*, நியூசெஞ்சுரிபுக்ஹவுஸ்(பி)லிட், சென்னை - 600098.
[3] மோகன். இரா. *திருமுருகாற்றுப்படை*, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை - 600098.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.
**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.